அமைச்சின் சுற்றறிக்கை இல. 1995/17

எனது இல. 4/ முதல்/06/ 95/ 54
கல்வி உயர்கல்வி அமைச்சு,
""இசுருபாய"",
பத்தரமுல்ல.
1995.06.30

எல்லாப் பாடசாலை அதிபர்களுக்கும் ,

குரு செத ( ஆசிரியர் நலன் ) விசேட கணக்கு முறை - ஆசிரியர்களதும் ஏனைய பணியாளர்களதும் மாதாந்தச் சம்பளங்களைக் காசோலை மூலம் செலுத்தல்

கௌரவ கல்வி உயர் கல்வி அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி கல்வி உயர் கல்வி அமைச்சுகள்ஆகியவற்றுடன் இணைந்து குரு செத என்ற பெயரில் ஒரு விசேட கணக்கினை ஆரம்பிப்பதற்கு மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறியத்தர விரும்புகின்றேன். இக்கணக்கு முறையானதுபாடசாலை, கோட்டம், மாகாணம் ஆகிய மட்டங்களில் அமைக்கப்படும் "" குரு செத "" என்ற தொண்டர் தாபனத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும்.

02. ஆசிரியர்கள் மத்தியிற் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் மோட்டார் வாகனங்கள் காணிபூமி வீடுகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல் பிள்ளைகளினுடைய உயர் கல்வி சுயதொழில் மங்கள விடயங்கள் இன்னள் வேளைத் தேவைகள் நுகர்வுத் தேவைகள் ஆகியவற்றுக்குச் சகாய வட்டி வீதத்தில் கடன்களை வழங்குதல் ஆசிரியர்கள் மூலம் மாணவர் மத்தியில் வங்கி முறைகளை பிரபல்யப்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களுடனேயே இக் குரு செத விசேட கணக்கு முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

03. எதிர்காலத்தில் அநேகமான ஆசிரியர்கள் இத்திட்டத்தில் சேரக்கூடும் என்பதனால் ஆசிரியர்களுடைய சம்பளங்களைச் செலுத்தும் போது கீழ்க்காணும் நடைமுறைகளைக் கைக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்

03.1 எனது 1985.10.21 ஆம் தேதி 4/ மு 06/ 213 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தின்படி கல்வித் திணைக்களத்தினால் ஒவ்வொரு பாடசாலைக்கும் தயாரிக்கப்படும் காசோலை அதிபருடைய ஆசிரியர் சம்பளக் கணக்குக்கு நேராக அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் அது பற்றி அதிபருக்கு அறிவித்தல் கொடுக்கப்படும். அத்துடன் சம்பளப் பட்டியலும் அவருக்கு அனுப்பி வைக்கப்படும் இவற்றைப் பெற்றுக் கொண்டதும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் வழங்கப்பட வேண்டிய தேறிய தொகைக்குரிய காசோலை அதிபரினால் தனித்தனியாக வரையப்பட்டு ஒவ்வொரு பேருக்குமுரிய சம்பளம் செலுத்தப்படும். இந்த முறை தொடர்ந்தும் கைக்கொள்ளப்பட வேண்டும்.

03.2 ஒரே வலயக் கல்வி அலுவலகத்தினால் சம்பளம் செலுத்தப்படும் சில பாடசாலைகளின் வங்கிக் கணக்கு ஒரு வங்கிக் கிளையில் பேணப்படுவதாக இருக்கும் சந்தர்ப்பங்களிலே அப் பாடசாலைகள் அனைத்தினதும் மீதிச் சம்பளத்துக்கு வங்கியின் பெயரில் ஒரு காசோலையை வழங்கிவிட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் செலுத்த வேண்டிய தொகையை ஒரு காப்புக் கடிதத்தின் மூலம் அறிவிப்பதனால் கல்வி அலுவலகங்களின் வேலைப் பளுவை மேலும் குறைத்துக்கொள்ளலாம் எடுத்துக்காட்டாக"" மக்கள் வங்கி பத்தரமுல்லை (பட்டியலின் படி) "" என்றவாறு காசோலை வரையப்பட வேண்டும்.

03.1 குரு செதத் திட்டத்திற் சேர்ந்து அதன் மூலம் கடன் பெற்றுள்ள ஆசிரியர்களுடைய சம்பளங்களைச் செலுத்துவதற்கு மேலுள்ள் 03.1 ஆம் பந்தியின்படி வரையப்படும் காசோலைகள் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிலேவைப்புச் செய்யத் தக்க வகையில் வங்கிக் கிளையின் பெயர் ஆசிரியருடைய பெயர் அவருடைய வங்கிக் கணக்கின் இலக்கம் ஆகிய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் எடுத்துக்காட்டாக □மக்கள் வங்கி பத்தரமுல்லை செ நடராசா க / குஇல. 101 என்றவாறு வரையப்பட வேண்டும் ஆயின் இதற்குரிய முன்னேற்பாடாக தமது சம்பளத்தை மக்கள் வங்கியின் சம்பந்தப்பட்ட கிளையிலுள்ள தமது குரு செத சேமிப்புக் கணக்கிற் காசோலை மூலம் வைப்புச் செய்வதற்கு தமது சம்மதத்தைத் தெரிவிக்கும் தத்துவக் கடிதம் ஒன்றைச் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கோவையில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

03.2 அதிபர்கள் சிலர் பழைய முறையைக் கைக்கொண்டு தமது ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பணம் மூலம் சம்பளஞ் செலுத்துவதாகத் தெரியவந்துள்ளது. இப்படியான சந்தர்ப்பங்களிலெ இத்திட்டத்தைச் சேர்ந்துள்ள ஆசிரியர்களுடைய சம்பளத்தை 03.3 ஆம் பந்தியர்களுடைய சம்பளத்துக்குச் சமமான தொகைக்குரிய காசோலை ஒன்றினைஅதிபருடைய பெயசில் வரைந்து காசாக்கிச் சம்பளங்களைச் செலுத்துதல் கூடும். ஆயின் எமது சுற்று நிருபங்களின் சட்ட திட்டங்களுக்கு முரணான முறையிற் காசாக ஆசிரியர்களுடைய சம்பளங்களைச் செலுத்தும் போது ஏதும்பண மோசடி ஏற்படுமாயின் அப்பணத்தை மீளளிப்பதற்கு அமைச்சு கட்டுப்பட்டிலது. எற்படும் நட்டத்தைச் சம்பந்தப்பட்ட ஆசிரியரே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

04. குரு செத விசேட கணக்கு முறை பற்றிய விவரங்கள் மக்கள் வங்கியினால் வழங்கப்படும் இக்கடிதம் மக்கள் வங்கியின் சம்மதத்துடன் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தயவு செய்து கவனிக்கவும்.

□குரு செத அமைப்பு முறை பற்றிய அறிவுரைகள் பிண்னிணைப்பு இல. 1 இற் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒ / இ. எம். டீ. டீ. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,

பிரதிகள் :
1. கணக்காய்வாளர் நாயகம்
2. பிரதம கணக்காளர்
3. மாகாணக் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள்
4. மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
5. மாகாண் கல்வித் திணைக்களங்களின் பிரதம கணக்காளர்கள்
6. த்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள்
7. வலய கல்வி அலுவலகங்களின் கணக்காளர்கள்
8. பொது முகாமையாளர் - மக்கள் வங்கி

} தகவலின் பொருட்டு

பின்னிணைப்பு இல. 1 – □குரு செத □ வின் அமைப்பு முறை

<u>பாடசாலை மட்டக் குரு செத</u>

i. சம்பந்தப்பட்டபாடசாலையின் அதிபர் இதன் பதவி வழித் தலைவராக நியமிக்கப்படுவார்

i. சம்பந்தப்பட்டபாடசாலையின் அதிபர் இதன் பதவி வழித் தலைவராக நியமிக்கப்படுவார்

ii. இந்தப் பாடசாலைக் குரு செத அமைப்புக்கள் வலய கல்விப் பணிப்பாளரினால் / கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் ஒன்றிணைக்கப்பட்டுக் கல்வி வலய / கோட்ட மட்டக் குரு செத மத்திய அமையம் நிறுவப்படும் வலயக் கல்விப் பணிப்பாளர் / கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் இந்தக் குரு செத மத்திய அமையத்தின் பதவி வழித் தலைவராக நியமிக்கப்படுவார்.

iii. பாடசாலைக் குரு செத அமையம் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்து மக்கள் வங்கிக் கிளையின் முகாமையளருடன் இணைந்து செயற்படுதல் வேண்டும் அவ்வாறே வலய / கோட்டக் குரு கசத அமையம் அதன் பிரதேசத்து மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

iv. இந்த வைப்புச் செய்தல் / கடன் வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்துவதிலே பாடசாலைக் குரு செத அமையத்துக்கு ஏதும் பிரச்சினை ஏற்படுமிடத்து அதற்குரிய தீர்வைக் காணும் பொருட்டு முழுவிவரங்களுடன் அது பற்றி மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருக்குவலய / கோட்டக் குரு செத அமையத்தின் மூலம் அறிவிக்க வேண்டுமென மக்கள் வங்கியின் தலைமை அலுவலகம் இந்த அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

v. வலய / கோட்டக் குரு செத அமையம் நிறுவப்பட்டதும் அது பற்றிப் புரண விவரங்களுடன் கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து. அங்கீகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனமாக அதனை அமைச்சின் கீழ்க் கொண்டு நடத்துவதற்குரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

vi. ஆசிரியர்களுடைய சம்பளக் கொடுப்பனவுகள் சம்பந்தமான வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் பதியப்படும் காசேடு பாடசாலையிலே நல்ல முறையில் வைத்திருக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுடைய சம்பளங்கள் குறித்து ஏனைய வங்கிகளுக்குச் செய்யப்படும் கொடுப்பனவுகள் பற்றி சரியான பதிவுகள் வைத்துக் கொள்ளப்பட வேண்டும் ஆசிரியருக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பளத்தில் எந்த ஒரு தொகைக்கும் எந்த ஒரு வெளித் தனியார் தாபனத்தின் பெயரிலும் காசோலைகள் வரையப்படலாகாது.